# மாகாணக் கல்வித் திணைக்களம் – வடமாகாணம்

**க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை**

**இரண்டாந் தவணை – 2018**

**சுட்டெண் :** ..........................

| புவியியல் I, II | 61 | T | I, II | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|---|---|

**புவியியல் I**

- இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் உள்ளடக்கியுள்ளது.
- ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை எழுதுக.

- **1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு அடைப்புக்குறியினுள் தரப்பட்ட விடைகளிலிருந்து சரியான விடையினை தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக**

01. புவிமேற்பரப்பின் பரப்பளவு ..............................................
(150 மில்லியன் $km^2$, 510 மில்லியன் $km^2$,410 மில்லியன் $km^2$)

02. உயரத்திற் கேற்ப வெப்ப நிலை குறைந்து செல்லும் வளிமண்டலப் படையானது
(இடைமண்டலம், மாறன்மண்டலம், படைமண்டலம் ) ..........................

03. கண்டங்களின் விளிம்பிலிருந்து சமுத்திரத்தை நோக்கிச் சாய்ந்து செல்லும் ஆழம் குறைந்த கடல் பகுதி
(கண்டமேடை, கண்டச்சாய்வு, கண்டத்துண்டு) ............................

04. அதிகளவான அகழிகளைக் கொண்ட சமுத்திரம்
(அத்திலாந்திக் சமுத்திரம், இந்து சமுத்திரம், பசுபிக் சமுத்திரம் ) .....................

05. உள்நாட்டுக் கடலினுள் கலக்கும் ஆறு
(குவாங்கோ, வொல்கா, ஓப் ) .....................

06. அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள நெல் ஆராய்ச்சி நிலையம்
(மகா இலுப்பல்லம, கண்ணொருவ, பொம்புவல) ................................

07. புதியவகை புல்லினங்களையும், புதிய இனப் பசுக்களையும் அறிமுகம் செய்யும் ஆய்வு நிலையம் ( பத்தலகொட, அம்பேவல, லுணுவில ) ..................

08. நாட்டின் ஆள்புலக் கடற்பரப்பு எல்லையின் அளவு
(24 கடல் மைல்கள், 200 கடல் மைல்கள், 12 கடல் மைல்கள்) ..............................

09. கஹட்டகக, போகல ஆகிய சுரங்கங்களிலிருந்து கிடைக்கும் இலங்கையின் கனியவளம்
(சிலிக்கா, காரீயம், மைக்கா ) ................................

10. வருடாந்த மழை வீழ்ச்சி 250 – 300mmஆகவும் பனிப்பொழிவும், மூடுபனியும் காணப்படும் இயல்புகளையும் கொண்ட உலகக் காலநிலைவலயம்
(முனைவுக் காலநிலை, மத்தியகோட்டுக் காலநிலை, இடைவெப்பக் காலநிலை) ...............

♦ **11– 15 வரையான வினாக்களுக்கு பின்வரும் கூற்றுகள் சரியாயின் "ச" எழுத்தினையும் பிழையாயின் "பி"எழுத்தினையும் சுற்றி வட்டமிடுக.**

11. டொலமைற் அழகுசாதனப் பொருட்களைத் தயாரிக்க உதவுகின்றது (ச /பி)

12. புவி மேற்பரப்பில் 70%நீரினால் சூழப்பட்டுள்ளது (ச /பி)

13. சுண்ணாம்புக்கல், பவளப்பாறைகள், டொலமைற் ஆகியன பாறைகளின் வகைகளாகும் (ச /பி)

14. வண்டல்மண் ஆற்றுப்பள்ளத் தாக்குகளில் பரவியுள்ளது. (ச /பி)

15. இலங்கையின் மீரிகம, பலாங்கொட ஆகிய பிரதேசங்களில் சேர்கன் காணப்படுகின்றது. (ச /பி)

♦ **16 – 20 வரையான வினாக்களிற்கு நிரல் 'அ'உடன் நிரல் 'ஆ' வினை இணைத்து சரியான விடைத் தொகுதிகளின் இலக்கத்தினை அடைப்புக் குறியினுள் எழுதுக.**

16. நிரல் 'அ'வினுள் தீவுகளின் பெயர்களும் நிரல் 'ஆ'வினுள் அவை அமைந்துள்ள கண்டங்களும் தரப்பட்டுள்ளன. இணைக்கும் போதுகிடைக்கும் சரியான விடைத் தொகுதி

| **'அ'** | **'ஆ'** |
|---|---|
| 1. மடகஸ்கார் | A. அவுஸ்திரேலியா |
| 2. தாய்வான் | B. ஆசியா |
| 3. நியூசிலாந்து | C. ஆபிரிக்கா |
| 4. பிரித்தானியத்தீவுகள் | D. ஐரோப்பா |

(1) CBAD (2) BCAD (3) ABCD (4) DCBA (……..)

17. மரங்களின் பெயர் நிரல் 'அ'விலும் அவற்றுக்குரிய தாவர வலயங்களின் பெயர்கள் நிரல் 'ஆ'விலும் தரப்பட்டுள்ளன. இணைக்கும் போது கிடைக்கும் சரியான விடைத்தொகுதி

| **'அ'** | **'ஆ'** |
|---|---|
| 1. கற்றாளை | A. கண்டல் தாவரங்கள் |
| 2. ஹோரா | B. ஈரவலய மலைக் காடுகள் |
| 3. சப்பு | C. உலர்வலய என்றும் பசுமையான கலப்புக் காடுகள் |
| 4. தேக்கு | D. முட் பற்றைக் காடுகள் |
| 5. கிண்ணை | E. என்றும் பசுமையான மழைக்காடுகள் |

(1) EDBCA (2) ACBDE (3) DEBCD (4) BCDAE (………)

18. வளிமண்டலத்தின் முக்கிய படைகள் நிரல் 'அ'விலும் அவற்றில் மேல் எல்லைகள் நிரல் 'ஆ' விலும் தரப்பட்டுள்ளது. இணைக்கும் போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதி

| **'அ'** | **'ஆ'** |
|---|---|
| 1. மாறன் மண்டலம் | A. வெப்பத்தரிப்பெல்லை |
| 2. படைமண்டலம் | B. மாற்றரிப்பெல்லை |
| 3. இடைமண்டலம் | C. படைத்தரிப்பெல்லை |
| 4. வெப்ப மண்டலம் | D. இடைத்தரிப்பெல்லை |

(1) ADBC (2) DCBA (3) CDAB (4) BCDA (………)

19. தலைநகரங்கள் நிரல் 'அ'விலும் அவற்றுக்குரிய நாடுகள் நிரல் 'ஆ'விலும் தரப்பட்டுள்ளன. இணைக்கும் போது கிடைக்கும் சரியான விடைத்தொகுதி

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. புதுடெல்லி | A. நேபாளம் |
| 2. திம்பு | B. பிரித்தானியா |
| 3. இஸ்லாமாபாத் | C. இந்தியா |
| 4. கத்மண்டு | D. பாகிஸ்தான் |
| 5. இலண்டன் | E. பூட்டான் |

(1) CEDAB (2) BCDAE (3) EBCDA (4) ABCDE (……….)

20. இலங்கையின் குடிசைக் கைத்தொழில்களின் வகைகள் நிரல் 'அ'விலும் அவை அமைந்துள்ள இடங்கள் நிரல் 'ஆ'விலும் அமைந்துள்ளன. இணைக்கும் போது கிடைக்கும் சரியான விடைத்தொகுதி

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. முகமூடி | A. ரட்டவடுன்ன |
| 2. தளபாடங்கள் | B. பிலிமத்தலாவை |
| 3. பிரம்புப் பொருட்கள் | C. தும்பறை |
| 4. பாய்கள் | D. மொரட்டுவ |
| 5. வெண்கலவேலை | E. அம்பலாங்கொட |

(1) ABCDE (2)DABCE (3) EDACB (4) BCDAE (……….)

♦ **21 – 25 வரையான வினாக்களிற்கு பொருத்தமான சொற்களை உபயோகித்து இடைவெளிகளை நிரப்புக.**

21. உலகின் பசுமைச் சுவாசப்பைகள் என அழைக்கப்படும் மீளப் புதுப்பிக்கக் கூடிய வளங்களாக …………………………… அமைந்துள்ளன.


22. உவர்நீர் அமைந்துள்ள பிரதான மூலங்களாக……………………காணப்படுகின்றன.

23. உலகின் பெரிய ஏரியாக……………………… அமைந்துள்ளது.

24. உலகின் பிரதான காரீய உற்பத்தி நாடாக……………………… அமைந்துள்ளது.

25. இலங்கையின் தென்மேற்குக் கரையோரங்களையும், கன்னியாகுமரி முனையையும் அண்மையில் ………………………… ப் புயலானது தாக்கியது.


♦ தரப்பட்ட இலங்கைப் படத்தின் உதவியுடன் 26 - 27 வரையான வினாக்களிற்கு விடையளிக்குக.




26. இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடத்தினை குறிக்கும் எழுத்து ……………..

27. இலங்கையின் கதிர்காமம் அமைந்துள்ள இடத்தினை குறிக்கும் எழுத்து …..………..

♦ **தரப்பட்டுள்ள வரைபடத்தின் உதவியுடன் 28 - 30 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.**




28. தரப்பட்டுள்ள வரைபடத்தின் படி 2024 ல் உலகின் மொத்த குடித் தொகையானது………… பில்லியன் ஆகும்.

29. கி.பி 1800ம் ஆண்டு வரை உலகின் மொத்தக் குடித்தொகையானது ……… பில்லியன்களுக்கு குறைவாகவே அமைந்திருந்தது.

30. 1960ம் ஆண்டு உலகின் மொத்தக் குடித்தொகையானது…………பில்லியன்களாகும்.

♦ **31 - 40 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினை தெரிவு செய்து உரிய இலக்கத்தினை அடைப்புக்குறியினுள் எழுதுக.**

31. தாய்ப் பாறையானது முழுமையாகச் சிதைவடைந்த நிலையில் காணப்படும் மண்படையானது

(1) A படை (2) B படை (3) C படை (4) D படை (…………)

32. அம்பாறை, மட்டக்களப்பு, மாவட்டங்களின் உள்நாட்டுப் பகுதிகளிலும் கரையோரப் பகுதிகளிலும் காணப்படும் மண்.

(1) செங்கபில மண் (2) கல்சியமற்ற செங்கபில மண்

(3) செங்கபில செம்பூரான் மண் (4) செம்மஞ்சள் லட்சோல் மண் (…….…..)

33. மீளப் புதுப்பிக்க முடியாத வளங்களில் ஒன்று

(1) நீர் (2) உலோகக்கனியங்கள்

(3) வளி (4) சூரியஒளி (…………)

34. சமுத்திரப் பகுதியில் பெருமளவு அமைந்து காணப்படும் உலகின் புவித்தகடு

(1) பசுபிக் தகடு (2) அத்திலாந்திக் தகடு

(3) ஆபிரிக்கத் தகடு (4) இந்தோஅவுஸ்திரேலிய தகடு (…………)

35. நிலப்பரப்பினால் முற்றாக சூழப்பட்டுள்ள கடலானது

(1) அரபிக்கடல் (2) சீனக்கடல் (3) ஜப்பான்கடல் (4) ஏரல்கடல் (…………)

36. இலங்கைக்கு தேயிலை அறிமுகம் செய்து வைத்தவர்

(1) ஜேம்ஸ்டெய்லர் (2) ஹென்றிவிக்காம்

(3) எட்வேட்பான்ஸ் (4) பிரடறிக்நோத் (…………)

37. இடவிளக்கப்படமொன்றில் மேல் வட்டக்கரையில் அமைந்துள்ள அம்சம்

(1) படத்தின் பெயர் (2) அகலக்கோட்டுநிலை

(3) நெடுங்கோட்டுநிலை (4) குறியீட்டுவிளக்கம் (…………)

38. இலங்கையின் முதலாவது இடவிளக்கப்பகுதி அலகானது.

(1) தங்காலை (2) கொழும்பு (3) மானிப்பாய் (4) கிளிநொச்சி

(…………)

39. இடவிளக்கப்படமொன்றில் மண்ணிறம் உபயோகிக்கப்படும் அம்சமானது

(1) ஆறு (2) தேயிலை (3) காடுகள் (4) அணைக்கட்டு

(…………)

40. பாரிசில் இடம்பெற்ற SOS உலக காலநிலை மகாநாட்டு ஒப்பந்தத்திலிருந்து அண்மையில் வெளியேறிய நாடு

(1) ஈரான் (2) பிரித்தானியா (3) வடகொரியா (4) ஐக்கியஅமெரிக்கா

(…………)

(40×1= 40 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம் – வடமாகாணம்

**க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை**

**இரண்டாந் தவணை – 2018**

| | | | | |
|---|---|---|---|---|
| **புவியியல்** I, II | **61** | T | I, II | |

**புவியியல் II**

- இவ்வினாத்தாள் I, II என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது
- பகுதி I இலுள்ள வினா கட்டாயமானது. அதில் (அ), (ஆ), (இ) ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
- பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்
- எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

**பகுதி – I**

01. **(அ)**

♦ **தரப்பட்ட இடவிளக்கப் படத்தின் உதவியுடன் பின்வரும் வினாக்களிற்கு விடையளிக்குக.**

i. தரப்பட்ட இடவிளக்கப் படத்தில் இலக்கம் 1 எனக்காட்டப்பட்ட அம்சம்
(மலை/ பள்ளத்தாக்கு/ புகலரண்)

ii. தரப்பட்ட இடவிளக்கப் படத்தில் இலக்கம் 2 இனால் குறித்து காட்டப்பட்ட நிர்வாக எல்லை
(மாவட்டம்/ நகரஎல்லை/ மாகாணம்)

iii. தரப்பட்ட இடவிளக்கப் படத்தில் இலக்கம் 3 இனால் குறித்துக் காட்டப்பட்ட அம்சம்
(சுவடு/ ஆறு / பள்ளத்தாக்கு)

iv. தரப்பட்ட இடவிளக்கப்படத்தில் இலக்கம் 4 இனால் குறித்துக் காட்டப்பட்டுள்ள அம்சம்
(நெல் / இறப்பர்/ காடுகள்)

v. தரப்பட்ட இடவிளக்கப்படத்தில் 5 எனும் சதுரத்தினுள் அடக்கப்படும் அம்சம்
(வெளி அரும்புப் பாறை/ கூம்புக் குன்று/ கணவாய்)

♦ **பின்வரும் வினாக்களிற்கு சரியான விடையளிக்குக.**

vi. தரப்பட்ட இடவிளக்கப்படம் அமைந்துள்ள மாகாணங்களுள் ஒன்றினைக் குறிப்பிடுக.

vii. இப் பிரதேசத்திற்கு நீர் வழங்கும் பிரதான மூலமாக அமைந்துள்ளது எது?

viii. இப் பிரதேசத்தின் சிறப்பம்சம் ஒன்று தருக?


ix. இப் பிரதேசத்தில் சிறப்பாக அபிவிருத்தி செய்யக்கூடிய கைத்தொழில் துறைஎது?

x. இப் பிரதேசத்தின் வடமேற்கு மூலைப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ள பயிர் எது?

(10×1= 10 புள்ளிகள்)

(ஆ)

♦ **தரப்பட்ட உலகப்படத்தின் உதவியுடன் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.**




i. A, B, C, எனத் தரப்பட்ட எழுத்துக்களில் இருந்து அமேசன் நதியைக் குறிக்கும் எழுத்து.

ii. D, E, F, எனத் தரப்பட்ட எழுத்துக்களில் இருந்து யூரல் மலையைக் குறிக்கும் எழுத்து.


iii. G, H, I, எனத் தரப்பட்ட எழுத்துக்களில் இருந்து கரீபியன் கடலைக் குறிக்கும் எழுத்து.

iv. J, K, L, எனத் தரப்பட்ட எழுத்துக்களில் மத்தியதரைக்கடல் பகுதி தவிர்ந்த தோடம்பழப் பயிர்ச்செய்கை நடைபெறும் பகுதியைக் குறிக்கும் எழுத்து.

v. M, N, O, எனத் தரப்பட்ட எழுத்துக்களில் புதிதாக வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடான தாய்வானைக் குறிக்கும் எழுத்து.

(5×1= 5புள்ளிகள்)

♦ **தரப்பட்ட இலங்கைப் படத்தின் உதவியுடன் பின்வரும் வினாக்களிற்கு விடையளிக்குக.**




i. A, B, C எனத் தரப்பட்ட எழுத்துக்களில் இறப்பர் பயிர்ச்செய்கை அதிகம் இடம்பெறும் களுத்துறை மாவட்டத்தைக் குறிக்கும் எழுத்து.

ii. D, E, F எனத் தரப்பட்ட எழுத்துக்களில் வெலிகம குடாவினைக் குறிக்கும் எழுத்து.

iii. G, H, I எனத் தரப்பட்ட எழுத்துக்களில் சுண்டிக்குளம் சரணாலயத்தைக் குறிக்கும் எழுத்து.


iv. J, K, L எனத் தரப்பட்ட எழுத்துக்களில் நுரைச்சோலை அனல்மின் நிலையம் அமைந்துள்ள மாவட்டத்தைக் குறிக்கும் எழுத்து.

v. M, N, O, எனத் தரப்பட்ட எழுத்துக்களில் உடவளவை நீர்த்தேக்கம் அமைந்துள்ள நதிப்பள்ளத்தாக்கினை குறிக்கும் எழுத்து.

(5×1= 5புள்ளிகள்)

## பகுதி II

02. i. தரப்பட்ட வரை படத்தில் A,B,C,D எனக் குறிக்கப்பட்ட வளிமண்டலப் படைகளைத் தருக.





ii. a) B மண்டலத்தில் அமைந்துள்ள விசேட படைப் பகுதி எது?

b) அதனைப் பாதிக்கும் இரண்டு வாயுக்கள் எவை?

iii. மேலே குறிப்பிட்ட விசேட படையின் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளக்கூடிய மூன்று வழி முறைகளைக் குறிப்பிட்டு அப்படையின் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குக?

(2+3+5= 10புள்ளிகள்)

03. i. தரப்பட்ட வரைபடத்தில் A,B,C,D எனக் குறிக்கப்பட்ட பகுதிகளைப் பெயரிடுக





ii. a) C, Dஆகிய பகுதிகளை பிரிக்கும் எல்லையின் பெயர் என்ன?

b) B படையின் சிறப்பியல்புகள் இரண்டு தருக?

iii. புவிமையத்தின் சிறப்பம்சங்களில் மூன்றினை குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றைப் பற்றி சுருக்கமாக விளக்குக?

(2+3+5= 10புள்ளிகள்)

04.




i. உலகின் அதிக குடித்தொகை அடர்த்தி கொண்ட வடகிழக்கு அமெரிக்கப் பகுதி, வடமேற்கு ஐரோப்பாவின் பகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் எழுத்துக்கள் எவை?

ii. a) உலகில் மிகக் குறைந்த குடித்தொகை கொண்ட பகுதி ஒன்றினைக் குறிப்பிடுக.

b) அப்பகுதியின் குடித்தொகை அடர்த்தி குறைவாக அமைவதற்கான இரண்டு காரணங்களைக் குறிப்பிடுக?

iii. உலகின் குடித்தொகை அடர்த்தியைத் தீர்மானிக்கும் மூன்று காரணங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக?

(2+3+5= 10புள்ளிகள்)

05.




i. உலகின் இரும்புருக்கு கைத்தொழில் நடைபெறும் A, B எனக் குறிப்பிட்ட இடங்களைக் குறிப்பிடுக?

ii. a) உலகில் இரும்புருக்கு உற்பத்தியில் இரண்டாவது இடத்தினை வகிக்கும் நாடு எது?

b) இரும்புருக்கு கைத்தொழில் மூலம் ஏற்படும் விளைவுகள் இரண்டினைக் குறிப்பிடுக?

iii. ஓரிடத்தின் கைத்தொழில் பரம்பலைத் தீர்மானிக்கும் மூன்று காரணங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினைச் சுருக்கமாக கவிளக்குக?

(2+3+5= 10புள்ளிகள்)

06.i. A,B எனக் குறிப்பிட்டுள்ள இலங்கையின் குளங்கள், நீர்த்தேக்கங்களை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக?

(கொத்மலை, கலாவாவி, சேனநாயக சமுத்திரம், திஸ்ஸவாவி, பராக்கிரம சமுத்திரம்)




ii. a) இலங்கையில் உள்ள நதிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

b) நீரின் இரண்டு பயன்பாடுகளைக் குறிப்பிடுக?

iii. நீரினைப் பயன்படுத்தும் போது ஏற்படும் மூன்று பிரச்சினைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக?

(2+3+5= 10புள்ளிகள்)

07. i. அபிவிருத்தி என்றால் என்ன?

ii. a) அபிவிருத்தியை அளவிட உதவிய பழைய சுட்டி ஒன்றினைக் குறிப்பிடுக?

b) அபிவிருத்தியை அளவிடும் புதிய சுட்டிகள் இரண்டினைத் தருக?

iii. அபிவிருத்தி நடவடிக்கைகளால் ஏற்படும் மூன்று சூழல் பாதிப்புகளை குறிப்பிட்டு அவற்றிற்கு தீர்வாக நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கான இரண்டு வழிமுறைகளைத் தருக?

(2+3+5= 10புள்ளிகள்)

08. i. இலங்கையில் காற்றுச் சக்தி நிலையங்கள் காணப்படும் இடங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

ii. a) இலங்கையில் பாவனையில் இருக்கும் வலுவளங்கள் இரண்டினைத் தருக?

b) சூழலுக்கு நன்மை தரும் வலுவளம் ஒன்றினைக் குறிப்பிடுக?

iii. வலுவளங்களைப் பாதுகாக்க வேண்டியதன் மூன்று முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினைப் பற்றி விளக்குக?

(2+3+5= 10புள்ளிகள்)